


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.11.2024) தலைமைச் செயலகத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் சந்தித்து, 2023–24ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட் நிறுவனத்தின் (TANMAG) தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத் தொகையான 5 கோடியே 72 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய்க்கான வங்கி வரைவோலையை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இயற்கை வளங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க. பணீந்திர ரெட்டி, தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சரவணவேல்ராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

ஈரோடு மாவட்ட

# கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் ஆய்வு!

## அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் மேற்கொண்டார்!

ஈரோடு, நவ.10-

ஈரோடு மாவட்டம், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் மற்றும் நவீன கால்நடை தீவன தொழிற்சாலையில் நேற்று முன்தினம் (08.11.2024) பால்வளத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன், நிர்வாக இயக்குநர் (தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், சென்னை) டாக்டர் எஸ். வினித் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா ஆகியோர் தலைமையில், மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ் மற்றும் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ஆகியோர் முன்னிலையில் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, பால்வளத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்பேரில், தமிழ்நாடு முழுவதும் உள்ள பால் உற்பத்தி நிலையங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பால் உற்பத்தி பொருட்களானது அனைத்துத் தரப்பினரும் பயன்படுத்தக் கூடிய உணவு பொருளாகும். எனவே அதனை தூய்மையாகவும், சுகாதாரமாக வும் தயாரித்து வழங்குவது அரசின் கடமையாகும். அந்த வகையில் இன்றைய தினம் (08.11.2024) ஈரோடு மாவட்டத்தில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. பால் உற்பத்தி செய்யும் இடம் மட்டுமல்லாது, பால் விற்பனை செய்யும் நிலையங்களிலும் இடத்தினை தூய்மையாக பராமரிக்க வேண்டும். தமிழகம் முழுவதும் ஆவின் பால் கொள்முதலை உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது. தமிழகம் முழுவதும் விவசாயிகளுக்கு கால்நடை தீவனம் தங்கு தடை இன்றி கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கோவை மாவட்டத்தில் பனீர் உற்பத்தி ஆலை துவங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு விட இந்த ஆண்டு தீபாவளிக்கு கூடுதலாக பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஆவின் நிறுவனத்தில் மற்ற நிறுவனங்களை விட பால் ஒரு லிட்டருக்கு 12 ரூபாய் குறைவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் ஆவின் நிறுவனம் மூலம் நாளொன்றுக்கு 1.74 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. அனைத்து ஆவின் பொது மேலாளர்களுக்கும் விற்பனையினை அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, பால்வளத்துறை அமைச்சர் ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், பால் உற்பத்தியாளர்கள் சங்கம், பால் தொகுப்பு குளிர்விப்பு நிலையம், ஈரோடு பால் பண்ணை அதி நவீன பாலகம் (Hi - Tech Parlour) மற்றும் கால்நடைத் தீவனத் தொழிற்சாலை ஆகியவற்றில் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, 21 பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.13.86 இலட்சம் மதிப்பீட்டில் கறவை மாடு பராமரிப்பு கடனுதவியும், 10 பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் கறவை மாடு வங்கி கடனுதவியும், ஒரு பால் உற்பத்தியாளருக்கு ரூ.9.40 இலட்சம் மதிப்பீட்டில் கால்நடை தொழுவம் அமைப்பதற்கு கடனுதவியும், 2 பயனாளிகளுக்கு ரூ.17,000/- மதிப்பீட்டில் திரவ நைட்ரஜன் சினை ஊசி குடுவை கடனுதவியும், மாவட்ட தொழில் மையம் சார்பில் பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் 2 உறுப்பினர்களுக்கு ரூ.24.92 இலட்சம் மதிப்பீட்டில் கறவை மாடு வாங்கி தொழில் செய்வதற்கான கடனுதவியும் என 36 பயனாளிகளுக்கு ரூ.68.35 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு கடனுதவிகளை வழங்கினார்.

மேலும், ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில், பால் கொள்முதல் திறன், உற்பத்தி திறன், பால் மற்றும் பால் உபபொருட்கள் விற்பனை விவரங்களை ஆவின் உயர் அலுவலர்களிடம் கேட்டறிந்தார். மேலும் பால் கொள்முதல் திறன், தரம் மற்றும் பால் மற்றும் பால் உபபொருட்கள் விற்பனையை அதிகரிக்க வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, சென்னிமலை சாலையில் உள்ள நவீன கால்நடை தீவன தொழிற்சாலையில் ஆலையின் உற்பத்தி, தீவன ஆலை இயக்குதல் முறை, கச்சாப்பொருட்களின் விவரங்கள் ஆகியவற்றை கேட்டறிந்தார். மேலும், தீவன ஆலையின் செயல்பாடுகள், ஆலையின் தானியங்கி முறை, பல்வேறு வகையான குச்சித் தீவன உற்பத்தி, குச்சி தீவன உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் கச்சா பொருட்களின் விபரம் ஆகியவற்றினை கேட்டறிந்தார்.

இந்நிகழ்வுகளில் ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி. சு.நாகரத்தினம், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், பொது மேலாளர் (பொறுப்பு) / மாவட்ட வருவாய் அலுவலர் பி.குமரேஸ்வரன், துணைப் பொது மேலாளர் (கால்நடை) மரு.பி.பழனிசாமி, துணைப்பதிவாளர் (பால் வளம்) இரா.கணேஷ், உதவி பொது மேலாளர்கள் மரு. பி.சண்முகம் (ANO), திருமதி. பி.உதயகலா (பொறியியல்), மேலாளர் (தரக்கட்டுப்பாடு) மரு.எம்.ஹரி பிரசாத் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் வழிகாட்டுதலின்படி,பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட வாக்குச் சாவடி முகவர்கள் ஆலோசனை கூட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் கலைஞர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் திருவண்ணாமலை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எவரெஸ்ட் நரேஷ்குமார் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கிளைக் கழக செயலாளர்கள் பூக்கார.வெங்கடேசன்,சங்கர், குறிஞ்சி நகர் வெங்கடேசன், வாக்கு சாவடி முகவர்கள்(BLA2) மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா கஞ்சனூர் கோ.கண்ணையன்
### நவம்பர் 10 (1988)



கழகம் துவங்கிய நாள் முதலே தஞ்சை மாவட்டக் கழக முன்னோடிகளான மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி ஆகியோரோடு இணந்து கழகப் பணியாற்றியவர்.

கஞ்சனூர் கிளைக் கழகச் செயலாளர், திருப்பனந்தாள் ஒன்றியச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

கஞ்சனூர் ஊராட்சித் தலைவராகவும் – நிலவள வங்கி துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

நெருக்கடி கால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**





ஈரோடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் பால் வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் ஆய்வு மேற்கொண்டு , பால் உற்பத்தியாளர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்வில் நிர்வாக இயக்குநர் பால் உற்பத்தியாளர்கள் இணையம் டாக்டர் எஸ்.வினித், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், பொதுமேலாளர் (பொ)/ மாவட்ட வருவாய் அலுவலர் குமரேஸ்வரன், ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# திருவண்ணாமலை வடக்கு மாவட்ட பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் அறிவிப்பு!



திருவண்ணாமலை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கீழ்க்கண்ட சட்டமன்றத் தொகுதி வாரியாக, கழக பாக முகவர்கள் (BLA - 2) கூட்டம் நடைபெறுகிறது. இக்கூட்டத்திற்கு தொகுதி பார்வையாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், அந்தந்த தொகுதிக்கு சம்பந்தப்பட்ட பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் பாகமுகவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| | **போளூர் தொகுதி, 09.11.2024, சனிக்கிழமை.** | |
| **நேரம்** | **ஒன்றியம்/ பேரூர்** | **இடம்** |
| மாலை 4.00மணி | சேத்துப்பட்டு கிழக்கு ஒன்றியம்<br>சேத்துப்பட்டுமேற்குஒன்றியம்<br>சேத்துப்பட்டு பேரூர்<br>பெரணமல்லூர் மேற்குஒன்றியம் | ஆர்.ஒய். திருமணமண்டபம், சேத்துப்பட்டு பேரூர். |
| **நேரம்** | **ஒன்றியம்/ பேரூர்** | **இடம்** |
| மாலை 5.00மணி | போளூர் மத்தியஒன்றியம்<br>போளூர் தெற்குஒன்றியம்<br>போளூர் பேரூர்<br>களம்பூர் பேரூர் | இராணிதிருமணமண்டபம், போளூர் பேரூர். |
| | **ஆரணி தொகுதி 09.11.2024, சனிக்கிழமை.** | |
| **நேரம்** | **ஒன்றியம்/ பேரூர்** | **இடம்** |
| காலை 10.00மணி | மேற்குஆரணிதெற்குஒன்றியம் | தேவிகாபுரம் சமுதாயக் கூடம் |
| பகல் 2.00மணி | மேற்குஆரணிவடக்குஒன்றியம் | எஸ்.பி.எஸ்.திருமணமண்டபம், வாழியூர். |
| மாலை 4.00மணி | கண்ணமங்கலம் பேரூர் | வெங்கடேஸ்வராமகால், கண்ணமங்கலம் பேரூர். |
| | **ஆரணி தொகுதி 10.11.2024, ஞாயிற்றுக்கிழமை.** | |
| **நேரம்** | **ஒன்றியம்/ பேரூர்** | **இடம்** |
| மாலை 4.00மணி | ஆரணிநகரம். | செங்குந்தமுதலியார் திருமணமண்டபம், சைதாப்பேட்டை, ஆரணி. |
| | **ஆரணி தொகுதி 11.11.2024, திங்கட்கிழமை.** | |
| **நேரம்** | **ஒன்றியம்/ பேரூர்** | **இடம்** |
| காலை 10.00மணி | ஆரணிதெற்குஒன்றியம் | சக்திவேல்திருமணமண்டபம், சத்தியவிஜயநகரம். |
| பகல் 12.00மணி | ஆரணிவடக்குஒன்றியம் | எஸ்.எஸ்.கே, மஹால், சேவூர். |
| | **செய்யாறு தொகுதி 08.11.2024, வெள்ளிக்கிழமை.** | |
| **நேரம்** | **ஒன்றியம்/ பேரூர்** | **இடம்** |
| காலை 11.00மணி | வெம்பாக்கம் மேற்குஒன்றியம் | நாடார் திருமணமண்டபம், இராந்தம் கிராமம். |
| பகல் 12.00மணி | வெம்பாக்கம் மத்தியஒன்றியம் | வெம்பாக்கம் மத்தியஒன்றியஅலுவலகம். |
| பகல் 2.00மணி | செய்யாறுநகரம் | பானுகவிதிருமணமண்டபம், செய்யாறு. |
| மாலை 4.00மணி | செய்யாறுமேற்குஒன்றியம்,<br>செய்யாறு கிழக்கு ஒன்றியம். | பொதிகைபிளாசா, பைபாஸ் சாலை, செய்யாறு. |
| | **செய்யாறு தொகுதி 10.11.2024, ஞாயிற்றுக்கிழமை.** | |
| **நேரம்** | **ஒன்றியம்/ பேரூர்** | **இடம்** |
| காலை 9.30மணி | வெம்பாக்கம் கிழக்கு ஒன்றியம் | ஒன்றியகழகஅலுவலகம், மாங்கால்கூட்ரோடு. |
| பகல் 12.00மணி | அனக்காவூர் கிழக்கு ஒன்றியம் | ஒன்றியகழகஅலுவலகம், மேல்மாகூட்ரோடு. |
| மாலை 4.00மணி | அனக்காவூர் மேற்குஒன்றியம் | செய்யாறுநகரம் |
| | **வந்தவாசி தொகுதி 09.11.2024, சனிக்கிழமை.** | |
| **நேரம்** | **ஒன்றியம்/ பேரூர்** | **இடம்** |
| காலை 10.00மணி | வந்தவாசி கிழக்கு ஒன்றியம் | சமூதாய கூடம், கீழ்கொடுங்காலூர். |
| | வந்தவாசிமேற்குஒன்றியம் | என்.எஸ்.செல்வாமகால், மாம்பட்டு. |
| | வந்தவாசிமத்தியம் ஒன்றியம் | துரைவீராசாமிமகால், தாழம்பள்ளம். |
| | வந்தவாசிநகரம் | திருவண்ணாமலை வடக்கு மாவட்டதிமுக ஆபிஸ், வந்தவாசி. |
| | பெரணமல்லூர் பேரூர். | பெரணமல்லூர் பேரூர் தி.மு.க.அலுவலகம். |
| | **வந்தவாசி தொகுதி 10.11.2024, ஞாயிற்றுக்கிழமை.** | |
| **நேரம்** | **ஒன்றியம்/ பேரூர்** | **இடம்** |
| பகல் 2.00மணி | பெரணமல்லூர் கிழக்கு ஒன்றியம் | ஆர்.எஸ்.டி.மகால், கோழிபுலியூர். |
| | தேசூர் பேரூர் | தேசூர் பேரூர் தி.மு.க.அலுவலகம், |
| | தெள்ளார் மேற்குஒன்றியம் | தெள்ளார் மேற்குஒன்றியஅலுவலகம். |
| | தெள்ளார் மத்தியஒன்றியம் | காமாட்சியம்மன் கோவில்வளாகம், தெள்ளார். |
| | தெள்ளார் கிழக்கு ஒன்றியம் | திரௌபதியம்மன் கோவில்வளாகம், நல்லூர். |

**பொருள் :** 1. தேர்தல் பணிகள், 2. கழக ஆக்கப் பணிகள்.

**எம்.எஸ்.தரணிவேந்தன்**
செயலாளர்
திருவண்ணாமலை வடக்கு மாவட்ட தி.மு.க.